## *2*

### *வெற்றிகரமான திருமணத்திற்கான வழிவகை ...*

# திருமணத்திற்கான தேவனுடைய திட்டத்தை புரிந்து கொள்ளுதல்

*வெற்றியுள்ளதோர் விவாகத்தை விரும்புவோர், திருமணத்தை ஆதியிலே ஏற்படுத்தினவரும், இவ்வுலகத்தைப் படைத்தவருமான தேவனுடைய ஆலோசனையை நாட வேண்டும். அவர் நம்மை சிருஷ்டித்ததால் நமக்கு எது நல்லது என்று அவருக்குத் தெரியும். அவர் திருமணத்தை ஏற்படுத்தியதால், திருமணத்திற்கான அவரது திட்டத்தைப் பின்பற்றினால், விவாகரத்தின் பிரச்சனையைத் தீர்த்துவைக்கும்.*

*ஒருவேளை, திருமணத்திற்கான தேவனுடைய திட்டத்தை கண்டுபிடிப்பதற்குரிய மிகச் சிறந்த ஒரே வேதபாகம் மத்தேயு 19:3-9 ஆகும்.*

> *அப்பொழுது, பரிசேயர் அவரைச் சோதிக்க வேண்டுமென்று அவரிடத்தில் வந்து, ''புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளி விடுவது நியாயமா?'' என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக; ''ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார்'' என்பதையும், ''இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்'' என்று அவர் சொன்னதையும் நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், ''தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்'' என்றார். அதற்கு அவர்கள், ''அப்படியானால், தள்ளுதற் சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாம் என்று மோசே ஏன் கட்டளையிட்டார்?'' என்றார்கள். அதற்கு அவர்: ''உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடம் கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை. ஆதலால் எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபச்சாரஞ் செய்கிறவனாயிருப்பான் ...'' என்றார்.*

## *இயேசுவானவர் திருமணத்தின் நிரந்தர தன்மை பற்றி போதித்தார்*

*தேவன் திட்டமிட்டபடியே ''மரணம் நம்மைப் பிரிக்கும் வரை'' இருக்கவேண்டியதாய் உத்தேசிக்கப்பட்டிருந்தது. மத்தேயு 19ல் பரிசேயர்கள்*

இயேசுவிடம் தங்கள் கேள்வியைக் கேட்ட போது, விவாகரத்தினை நியாயப்படுத்தும் ஓர் தொடர் விவாதத்திற்கு அவரை இழுக்க முயற்சித்தனர். உபாகமம் 24ல் ஒருவன் தன் மனைவியிடத்தில் "இலச்சையான காரியத்தைக்" கண்டு தள்ளிவிடுதலைப் பற்றி நியாயப்பிரமாணம் கூறியதன் அர்த்தமென்ன வென்று அவர்கள் கேட்டனர். மனைவி செய்த ஏதோ ஒன்று கணவனுக்கு பிடிக்கவில்லையென்றால் உதாரணத்திற்கு, அவள் தோசையை தீய்த்துவிட்டால் அவன் அவளை விவாகரத்து செய்துவிடலாமென்று இந்த வேதவசனப்பகுதிக்கு சில யூத போதகர்கள் விளக்கமளித்தனர். மற்றவர்களோ, இந்த "இலச்சையான காரியம்" என்பது விபச்சாரத்தை மட்டுமே குறிப்பிடுகிறது எனக் கருதினர். எனவேதான் அவர்கள் "எந்தக் காரணத்திற்கு வேண்டுமானாலும்" ஒருவன் தன் மனைவியைத் தள்ளிவிடலாமா என்று கேட்டனர்.

இயேசுவோ, விவாகரத்து என்பது திருமணத்திற்கான தேவனுடைய ஆதி திட்டத்தில் இருந்ததில்லை (அன்றும் இல்லை இன்றும் இல்லை) இருப்பதும் இல்லை என்று பதிலுரைத்தார். ஒரு புருஷனும் அவன் மனைவியும் வாழ்நாள் முழுவதும் இணைந்திருப்பது தான் ஆரம்ப கட்டத்திலிருந்தே தேவனுடைய விருப்பமாயிருந்தது. இயேசுவானவர் பரிசேயரின் கேள்விக்கு ஆரம்பத்தில் அளித்த பதிலானது விவாகரத்து தேவனுடைய திட்டத்திற்கு உட்பட்டதல்ல என்பதை ஆணித்தரமாக வலியுறுத்திற்று. "தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்." உயிருள்ளவரை, ஒரு மனிதன், ஒரே மனைவி என்பதுவே தேவனுடைய திட்டம்.

இருப்பினும், ஒரு விதிவிலக்கு உண்டு. பரிசேயர் விடாப்படியாய் இருக்கையில் இயேசு மேலும் கூறுகையில், விபச்சாரத்தின் காரணமாக ஒருவன் தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் விபச்சாரம் பண்ணுகிறவனல்ல[1] என்றார். ஆக, விபச்சாரத்தின் நிமித்தம் விவாகரத்து என்பது வேதவாக்கியங்களின்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் விவாகரத்து அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் அது தேவையானது அல்ல (அவசியமல்ல). ஒரு கணவனோ அல்லது மனைவியோ விபச்சாரம் செய்துவிட்டால், தவறேதும் செய்யாத வாழ்க்கைத்துணை அதை மன்னிக்கும் பட்சத்தில் அத்தம்பதியினர் தொடர்ந்து இணைபிரியாது வாழ்ந்திடலாம்.

விபச்சாரத்தின் காரணமாக விவாகரத்து அனுமதிக்கப்பட்டிருப்பது என்பது, விபச்சாரம் எவ்வளவு பயங்கரமானது என்பதை வலியுறுத்திக் காட்டுகிறது. திருமண பந்தங்களை முறித்துக் கொள்வதற்கு அந்தப் பாவம் மட்டுமே வழிவகுக்கிறது.

இருந்தாலும், "வேதவாக்கியத்தின்படியான விவாகரத்து"[2] என்பதுவும் கூட விதிவிலக்குதான் என்பது வலியுறுத்தப்பட வேண்டும். சில சமயங்களில் கிறிஸ்தவர்களும் கூட இந்த விதிவிலக்கின்மீது அதிக கவனம் செலுத்துவதின் காரணமாக, புருஷனும் அவன் மனைவியும் இணைபிரியாதிருக்க வேண்டும் என்ற விதியை முற்றிலும் மறந்துபோகின்றனர். சொல்லப்போனால், விவாகரத்து என்பது இருக்கவே கூடாது. சபையின் (அங்கத்தினர்கள்) விசுவாசிகள் திருமணத்தின் நிரந்தர தன்மையைப் பற்றி போதிப்பதை அலட்சியம் செய்துவிட்டு, விவாகரத்து பற்றியும் மறுமணம் பற்றியும் விவாதிப்பதற்கு அளவுக்கு அதிகமான நேரத்தை செலவிடுதல் கூடாது.

*விவாகரத்து மற்றும் மறுமணம் பற்றிய சில கேள்விகளுக்கு சுலபமான பதில்கள் இல்லை. விவாகரத்து குறித்து வேதம் போதிப்பதை அறிந்து கொள்ள முடிந்த போதிலும், அந்த வேதவசனபோதனைகளை சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் அப்படியே கடைப்பிடிப்பதென்பது பொதுவாக கடினமாயிருக்கிறது. ஜனங்கள் தங்கள் வாழ்வில் மாட்டிக்கொண்டிருக்கும் முடிச்சுகளைப் பார்த்தால், அவைகளை எவ்விதம் அவிழ்ப்பது என்பதை தீர்மானிக்க சாலொமோனின் ஞானம் வேண்டும் போலிருக்கிறது. ஒரு உண்மையைப் பொறுத்தவரையில் நாம் உறுதியுடனிருக்கலாம்: உயிருள்ள வரை கணவனும் மனைவியும் சேர்ந்தே வாழ்வது என்பதுதான் நியதி.*

*கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் பார்த்தால், "முறையான" விவாகரத்து என்ற ஒன்று இல்லவே இல்லை. வேதவசனப்படியான மணமுறிவு நிகழலாம் - ஆயினும் வேத வசனப்படியான மணமுறிவின்போது, துணையாளிகளில் ஒருவர் விபச்சாரம் செய்தவராயிருக்கிறார். ஒரு விவாகம் எவ்வளவு பயங்கரமான விதத்தில் முடிந்து போகிறது! வேதவசனத்தின்படியிராத ஓர் விவாகரத்து என்றால், அதில் ஒருவரோ அல்லது இருவருமோ தேவனுடைய திருமண சட்டங்களை மீறுகின்றபடியால் அதுவும் பயங்கரமானதுதான்.*

*விவாகரத்து என்பது ஓர் தீர்வு அல்ல; மாறாக விவாகரத்தென்பது, தீர்க்கவே முடியாத பல புதிய பிரச்சனைகளை உருவாக்கிடும் ஓர் பிரச்சனையாயிருக்கிறது. விவாகரத்தின் விளைவாக பணப்பிரச்சனைகள், சட்டச்சிக்கல்கள், குடும்பச் சிக்கல்கள், மனோ ரீதியான சிக்கல்கள் மற்றும் ஆவிக்குரிய சிக்கல்கள் ஏற்படுகின்றன. விவாகரத்து என்பது விவாகரத்து பெறும் தம்பதியரை மட்டுமல்லாமல் அவர்களது பிள்ளைகள், குடும்பங்கள், நண்பர்கள் ஆகியோரையும், ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிக்கிறது.*

*விவாகரத்து செய்து விட்ட ஐந்துபேர், விவாகரத்து செய்யும் எண்ணத்தில் இருந்த தங்கள் சிநேகிதியிடம் அது பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். அவளைத் தடுத்து நிறுத்துவதற்காக, விவாகரத்து செய்யும் முன் தங்களுக்கு தெரியாமற்போன பல விஷயங்களை அவளிடம் எடுத்துக் கூறினர். அந்தப்பட்டியலில் இருந்த உண்மைகளில் ஒன்று, "நீங்கள் ஒரு விதமான பிரச்சனைகளை விற்று வேறு விதமான பிரச்சனைகளை வாங்கிக் கொள்ளுகிறீர்கள்" என்பதுவே. "மிகச் சுமூகமான முறிவுகளும்கூட ஆழமான காயங்களை உண்டாக்கிவிடுகின்றன. விவாகரத்தென்றால் அதற்கு கண்டிப்பாக பின்விளைவுகள் உண்டு." விவாகரத்து செய்யப்பட்ட ஒருவர், "ஓட்டை உடைசல் சாமான்களை" போன்றுதான் கருதப்படுவார். அது மாத்திரமல்லாமல், "உனது விவாகரத்து உன்னையும் உன் துணையையும் மட்டுமல்லாமல் உன்னைச் சுற்றியுள்ள அனைவரையும் பாதிக்கிறது" - அதாவது நண்பர்கள், சபை அங்கத்தினர்கள், குடும்பத்தினர், உங்கள் பிள்ளைகள் ஆகியோரையும் பாதிக்கிறது. விவாகரத்தில் "பண விரயமும்" உண்டு[3].*

*விவாகரத்து என்ற வியாதிக்கு ஒரே ஒரு மருந்துதான் உண்டு: வருமுன் காத்தல்! விவாகரத்திற்கு பின்பு சொத்துக்களையும் பிள்ளைகளையும் என்ன செய்வதென்ற பிரச்சனையை ஒரு தம்பதியினர் எவ்விதம் சமாளிக்க முடியும்? விவாகரத்து என்கிற சமூக அவலத்தோடு ஜனங்கள் எப்படி ஒத்துப் போகின்றனர்? மறுமணம் என்கிற பிரச்சனை குறித்த விஷயம் என்ன? இவையெல்லாவற்றிற்கும் விவாகரத்து செய்து கொள்ளாமலிருப்பது தான் திட்டவட்டமான ஒரே தீர்வு*

ஆகும்.

விவாகமுறிவினை நீங்கள் எவ்விதம் தவிர்த்திடலாம்? "திருமண வாக்குறுதிகளை விளையாட்டாக எண்ணி எளிதாக மீறிவிடும்" இன்றைய உலகில் நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணைவரும் இதுமுதல் இணைபிரியாமல் எவ்வாறு சேர்ந்து வாழ்ந்திடலாம்?

## ஒரு திருமணம் நிரந்தரமாய் இருப்பது எவ்விதம் என இயேசு போதித்தார்

திருமணத் தம்பதியர் தங்கள் திருமணம் நீடித்திருக்கும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள இரண்டு காரியங்களைச் செய்யலாமென்று இயேசுவின் கூற்றுகள் சுட்டிக்காட்டுகின்றன.

### திருமணத்தின் நிரந்தரதன்மையை ஒப்புக்கொள்ளுங்கள்

முதலாவதாக திருமணத்தின் நிரந்தர தன்மையை கணவனும் மனைவியும் ஒத்துக் கொள்ள வேண்டும். "மரணம் நம்மைப் பிரிக்கும்வரை" என்ற சொற்கள் திருமண வாக்குறுதிகளின் ஒரு பகுதியாக மாத்திரம் இருந்துவிடாமல் அந்த எண்ணம் உள்ளத்தில் பதிந்திருக்க வேண்டும். கணவன் மனைவி ஆகிய இருவருமே, தங்களைப் பொறுத்தவரையில் *விவாகரத்து என்பது விரும்பத்தக்கது அல்ல!* என்ற உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும்.

இந்த உண்மையை அவர்கள் ஏற்றுக்கொண்டால், வழக்கம்போல விவாகத்தில் பிரச்சனைகள் எழும்பும்போது இவர்கள், "ஐயோ, நம்மால் தீர்க்க முடியாத ஓர் பிரச்சனை வந்துவிட்டது; எனவே விவாகரத்து செய்து கொள்வோம்" என்று சொல்ல மாட்டார்கள். மாறாக, பிரச்சனைகள் ஏதும் எழும்போது, நரி துரத்திய இரண்டு முயல்களைப் போலிருப்பார்கள். "நரியை விட வேகமாக நம்மால் ஓட முடியுமா?" என்று ஒரு முயல் கேட்டதாம். அதற்கு மற்ற முயல், "ஓடித்தானே ஆக வேண்டும்!" என்றதாம்.[4] விவாகரத்தின் நிரந்தரத்தில் அவர்கள் உண்மையான நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் கணவனும் மனைவியுமாக சேர்ந்து தங்கள் பிரச்சனைகளை சரி செய்து கொள்வார்கள். ஏனெனில் அவர்கள் "இப்படி செய்து தானே ஆக வேண்டும்"! விவாகரத்து என்பது அவர்கள் விரும்புகிற ஒன்றல்ல.

விவாகமென்பது வாழ்நாள் முழுவதும் நீடிக்கிறது என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளுதல், ஒருவன் எவ்வாறு தனது துணையை தெரிவு செய்கிறான் என்பதை பாதித்தாக வேண்டும். வாழ்க்கைத்துணை தேடும் ஓர் இளைஞர் வெறும் கவர்ச்சியும் உடல் அழகும் உடைய ஒருவரை தேடிக் கொண்டிருக்கலாகாது. அதற்கு பதிலாக, அவனோ அவளோ, "இந்த நபரோடுதான் இனி என் வாழ்நாளைக் கழிக்க விரும்புகிறேனா?" என்று கேட்கிறவர்களாயிருக்க வேண்டும். வாலிப மக்கள் தங்களுக்கு தென்படும் துணைகளை வேறு பல விஷயங்களை வைத்து எடைபோடுவதற்கு பதிலாக இதை வைத்து எடைபோடுவதற்கு இந்தக் கருத்து காரணமாயிருந்திட வேண்டும். தேர்ந்தெடுக்கப்போகும் வாழ்க்கைத்துணையை மதிப்பீடு செய்வதில், அழகு மற்றும் உடல் கவர்ச்சியை விட, பண்பு, அறிவு, உழைப்பு, பொறுப்பு, ஒழுக்கம், பரிவு ஆகிய இத்தகைய தன்மைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்திட வேண்டும்.

### *திருமணத்தின் ஒற்றுமைக்காக உழைத்திடுங்கள்*

இரண்டாவதாக, ஒரு தம்பதியினர் ஒற்றுமைக்காக உழைத்திட வேண்டும். கணவன் மனைவி ஐக்கியமென்பது திருமணத்திற்கான தேவனுடைய திட்டத்தின் ஓர் அம்சமாயிருக்கிறது. இயேசுவானவர் விவரித்தபடியாக அந்த ஐக்கியத்தில் ''விட்டுப் பிரிதல்,'' ''இசைந்திருத்தல்,'' ''ஆகுதல்'' ஆகியவை சம்பந்தப்பட்டிருக்கின்றன.

*விட்டுப்பிரிதல்.* அந்த ஆணும் பெண்ணும் அவரவர் தம் பெற்றோரை விட்டுப்பிரிந்தாக வேண்டும். வழக்கமாக இது ஓர் சரீரபிரகாரமான பிரிதலாயிருக்கிறது; புதுமணதம்பதியர் தங்கள் பெற்றோரது வீடுகளை விட்டு வெளியேறி/தனிக்குடித்தனம் செய்கின்றனர். ஆயினும், அவர்கள் தங்கள் பெற்றோரை விட்டு பிரிந்து தனியாக குடியிருக்கிறார்களோ இல்லையோ, அவர்கள் தங்கள் உணர்வுகளிலும் மனோ நிலையிலும் தங்கள் பெற்றோரை விட்டு பிரிந்தாக வேண்டும். அவர்களது அம்மாக்களையும் அப்பாக்களையும் சார்ந்தே இருக்கும்படியாயிருந்த கட்டுகள் அவிழ்த்துவிடப்பட வேண்டும். ஒருவனுக்கு அவனது பெற்றோர்கள் வாழ்நாள் முழுவதுமே முக்கியமானவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் திருமணமான பிறகோ அவனது முக்கியப்பற்று பெற்றோரிடம் அல்ல. ஒரு கணவன் அல்லது மனைவியின் முதல் அக்கரை (தேவனுக்கு அடுத்ததாக) பெற்றோர் அல்ல, வாழ்க்கைத் துணையே.

திருமணமாகும்போது ஆணும் பெண்ணும் தங்கள் பெற்றோரை விட்டு பிரிகின்றனர் என்ற கருத்து, திருமணமென்பது வயது வந்தவர்களுக்குத்தான் என்ற உண்மையை உணர்த்துகிறது! திருமணமென்பது தங்கள் பிழைப்பிற்கு வழி செய்து கொள்ளுகின்ற, விவேகமான முடிவுகளை எடுக்கக்கூடிய அளவிற்கு முதிர்ச்சி பெற்றவர்களுக்கு மற்றும் குடும்பப் பொறுப்புகளை அனுதினம் சமாளிக்கக்கூடிய போதுமான பக்குவம் உள்ளவர்களுக்கே உரியது.

*இசைந்திருத்தல்.* திருமண தம்பதியர் ஒருவருடன் ஒருவர் "இசைந்திருக்க வேண்டும்" (ஆதியாகமம் 2:24; KJV). அவர்கள் ஒன்றாய் "பிணைந்திருக்க வேண்டும்" என்பதுவே அந்த வினைச் சொல்லின் கருத்தாகும் (ஆதியாகமம் 2:24; மத்தேயு 19:5; NASB; NRSV). "... புருஷனானவன் ... தன் மனைவியுடன் இணைக்கப்பட்டிருப்பான்" என்று NIV மொழிபெயர்க்கிறது, மற்றும் "புருஷன் தன் மனைவியுடன் உறுதியாக இணைந்திருப்பான் (பிரிக்கமுடியாதபடி ஒட்டியிருப்பான்)'' என்ற வார்த்தைகளை சேர்த்திருக்கிறது. எனவே திருமணமென்பது ஒன்றித்து இருத்தலை உள்ளடக்கியிருக்கிறது.

சில சமயங்களில் கணவனும் மனைவியும் பிரிந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். பிரசங்கிமார்கள் சில வேளைகளில் பிரசங்கிப்பதற்காகவும், போதிப்பதற்காகவும் தொலைதூரம் பயணிப்பதுண்டு அல்லது சுவிசேஷப் பயணங்கள் மேற்கொள்வதுண்டு. ஒரு மனைவி வயதான பெற்றோரை கவனிப்பதற்கோ அல்லது தனது பிள்ளைகளுக்கோ பேரப் பிள்ளைகளுக்கோ உதவியாக இருப்பதற்காகவோ சில காலம் போய்விட நேரிடலாம். புருஷன் ஒரு வியாபார பயணம் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படலாம். இத்தகைய பிரிவுகள் விதியாயிராமல் விதிவிலக்காய் இருந்திடல் வேண்டும். திருமணமென்பது இயல்பாகவே இருவர் கூடி வாழ்கின்ற, கூடி உழைக்கின்ற, கூடி உணர்கின்ற, கூடி விளையாடுகின்ற, மற்றும் - கிறிஸ்தவர்களுக்கு கூடி தொழுது ஜெபிக்கின்றதாய் இருக்கின்றது. இதன் காரணமாகவே, கணவனும் மனைவியும்

ஒன்றினைந்து இருப்பதற்கான சந்தர்ப்பங்களுக்கு ஏற்பாடு செய்திட வேண்டும். அவர்கள் ஒன்றிணைந்திருக்கும் வேளைகள் இன்பகரமாயிருப்பதற்கு ஏதுவான பழக்க வழக்கங்களையும் மனோபாவங்களையும் அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

*ஆகுதல்.* ஒரு திருமண தம்பதியர் "ஒன்றாய் ஆகின்றனர்." மத்தேயு 19:5 ன் (மற்றும் ஆதியாகமம் 2:24) ன் சந்தர்ப்பக் கருத்தில் உள்ள "அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" என்ற கூற்று முக்கியமாக கணவனும் மனைவியும் அதிநெருக்கமாக "ஒன்றாய்" மாறுகின்ற பாலுறவுச் செயலைக் குறிப்பிடுவதாயிருக்கலாம். திருமணமென்பது பாலுறவுப் பிணைப்பு சம்பந்தப்பட்டது.

திருமணத்தில், கணவனும் மனைவியும் *உடல் ரீதியாக* அல்லது பாலியல் ரீதியாக மட்டுமல்லாமல், *சட்டப்பூர்வமாகவும்* ஒன்றாகி விடுகின்றனர். அரசாங்க வரி விஷயங்களில் அவர்கள் ஓரம்சமாகவே கருதப்படுகின்றனர். அவர்களது *இலட்சியங்கள்*, கனவுகள் மற்றும் விருப்பங்கள் ஆகியவற்றில் அவர்கள் ஒன்றுபட்டவர்களாக மாறிவிட வேண்டும். இவை அனைத்திற்கும் மேலாக அவர்கள் *ஆவிக்குரிய* வகையில் ஒன்றுபட்டவர்களாக ஒன்றாகிட வேண்டும். கணவனும் மனைவியுமாகிய இருவரும் உத்தம கிறிஸ்தவர்களாகவே இருந்திட முடிவெடுப்பதை விட வேறெதுவும் ஒரு திருமணம் சேர்ந்தே இருப்பதற்கு உதவி புரிந்திடாது.

ஆக, திருமணமென்பது, இரண்டு தனிநபர்கள் "இனி இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருப்பதற்கு" தங்களை ஒன்றாய் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையாய் இருக்கிறது. திருமண பாஷையில், துணைவர் ஒருவரின் "நான்" "எனக்கு" "எனது" என்ற சொற்கள், இருவராய் சேர்ந்து கூறும் "நாம்" "நமக்கு" "நமது" என்ற வார்த்தைளுக்கு முன் முக்கியத்துவம் குறைந்து போகின்றன. இந்த உயர்வான இலட்சியம் காட்டும் ஒற்றுமை என்பது தானாகவோ அல்லது எளிதாகவோ வருவதில்லை. அதில் கணிசமான சுயநலமின்மை, மிகுதியான ஒத்துழைப்பு, தம்பதியரின் ஏகோபித்த நலனுக்காக ஒருவரது அபிப்பிராயங்கள், விருப்பங்கள், உரிமைகள் ஆகியவற்றை அடிக்கடி விட்டுக்கொடுத்தல் என்பவை சம்பந்தப்பட்டிருக்கின்றன. ஒற்றுமைக்கு உழைப்பு தேவை. திருமணமென்பது எத்தனை காலம் நீடித்தாலும் அத்தனை காலமும் "ஒருவராய் ஆகுதல்" என்பது ஓர் தொடர் நடவடிக்கையாகவே இருந்து வருகிறது.

## முடிவுரை

விவாகரத்தான மக்களைப் பற்றிய சோகக் கதைகள் ஏராளம் உண்டு. கணவன்மாரால் கைவிடப்பட்ட இளம் பெண்கள் தங்கள் சிறுபிள்ளைகளுடன் வறுமையில் வாடுகின்றனர். அம்மா மட்டுமல்ல அப்பாவும் கூட தேவைப்படும் அப்பிள்ளைகளுக்கான உணவு, உடை, பராமரிப்பு ஆகியவற்றிற்கு தாமே வழி வகை செய்து வளர்ப்பதற்கானதோர் பிழைப்பைத் தேடி அவர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். பிள்ளைகளின் தேவைகளை கவனிப்பதற்காக, தங்களது சொந்த உணர்ச்சிகளையும் உள்ளத் தேவைகளையும் அவர்கள் கண்டு கொள்வதில்லை. ஆண்கள் ஜீவனாம்ச தொகையை சரிவர கொடுக்க முடியாமல் திணறுகின்றார்கள், ஏனென்றால் அவர்கள் இப்போது இரண்டு குடும்பத்தை தாங்க வேண்டியிருக்கிறது; சில சமயங்களில் தங்கள் செல்லப்பிள்ளைகளைக்

காண்பதற்குக் கூட குறைந்த அவகாசமே கிடைக்கிறது. விவாகரத்து என்பது காரணம் எதுவாயிருந்தாலும், சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அது ஓர் துயர சம்பவமே.

உங்களுக்கு திருமணமானால், விவாகரத்தினை நீங்கள் எவ்விதம் தவிர்த்திடலாம்? தேவனுடைய திட்டத்தை பின்பற்றுங்கள்! திருமணத்தின் நிரந்தர தன்மையை ஏற்றுக்கொள்ளுங்கள், உங்கள் வாழ்க்கைத் துணையோடு ஒற்றுமையாயிருக்க பிரயாசப்படுங்கள்.

---

குறிப்புகள்

[1]இப்பகுதிக்கு வேறு வியாக்கியானங்களும் முன்வைக்கப்படுகின்றன. இங்கே தரப்பட்டுள்ள கருத்தானது பெரும்பான்மையினரால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதும், இயேசுவின் வார்த்தைகளின் எளிமையான கருத்தினைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்துள்ளது. [2]இந்தச் சொற்றொடரானது, தனது வாழ்க்கைத்துணை விபச்சாரம் செய்துவிட்ட காரணத்தால், நிரபராதியான ஆள் பெற்றுக்கொண்ட விவாகரத்தினைக் குறிப்பிடுகிறது. [3]Georgia Shaffer, "What I Wish I'd Known Before I Got Divorced," http://www.christianitytoday.com/mp/2005/002/7.46.html. [4]விரும்பத்தக்க மாற்றுவழி ஏதுமில்லை என்பதுதான் அதன் கருத்தாகும்.